DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : மரு.ராஜேஷ் | Father/Husband Name : ராமசாமி |
| Age : 39 | Village : கோவில்பட்டி |
| Taluk : | Calling : மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the Feb 16, 2026 3:12 PM

(Accused Present)

**முதல் விசாரணை** :-

1. நான் தற்போது கோவில்பட்டி ஆர்.எம்.எஸ். மருத்துவமனையில் அறுவை சிகிச்சை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் 09.01.2018 ம் தேதி மாலை 06.10 மணியவில் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது நிதீஷ்குமார், வயது 13, த/பெ.ராஜ்குமார், 3/47, வடக்கு தெரு, புதுக்கிராமம், சங்கராபுரம், சாத்தூர் தாலுகா என்பவர் வெடி மருந்து தீப்பிடித்ததாக முகத்தில் 10% முதல் 15 % தீக்காயத்துடன் 108 அவசர ஊர்தி வாகனத்தில் அவரது தாயார் தேவி மூலம் சிகிச்சைக்கு வந்தார். அவரை மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை முடித்து அவரை விடுவித்தபோது அவரது கண் மங்கலாக தெரிவதாக கூறினார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். அந்தநபருக்கு பதிவு செய்த விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று என்னிடம் காட்டப்படுவது தான். (**அது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. அதே விபத்தில் பாலகணேஷ், வயது 13, த/பெ.ராஜ௰, புதுக்கிராமம், உப்பத்தூர் போஸ்ட், விருதுநகர் மாவட்டம் என்பவர் அவரது தந்தையுடன் 108 அவசர ஊர்தியில் சிகிச்சைக்காக வந்தார். அவரை பரிசோதித்தபோது அவருக்கு முகத்திலும், நெஞ்சுப்பகுதியிலும், இரண்டு முன் கை பகுதியிலும் தீக்காயங்கள் இருந்தன. அதை 20-30 சதவீத தீக்காயங்கள் என மதிப்பீடு செய்து முதலுதவி செய்து அவரை திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். பின்னர் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் மருத்துவர் திரு.அதில்அகமதுயாமின் (உதவி மருத்துவர், திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை) கொடுத்த கருத்துப்படி அந்த நபருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். அந்தநபருக்கு பதிவு செய்த விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று என்னிடம் காட்டப்படுவது தான். (**அது அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. அதே விபத்தில் முகத்திலும், இரண்டு முன்னங்கையிலும், இடுப்பு பகுதியிலும் 30-40 சதவீத தீக்காயங்களுடன் வந்த பாண்டித்துரை, வயது 12, த/பெ.செல்வக்குமார், புதுக்கிராமம், உப்பத்தூர் போஸ்ட், விருதுநகர் மாவட்டம் அவருக்கு முதலுதவி சிகிச்சையளித்து மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் மருத்துவர் திரு.கண்ணன், (உதவி மருத்துவர் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை) கொடுத்த

கருத்துப்படி பாண்டித்துரைக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கினேன். அந்தநபருக்கு பதிவு செய்த விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று என்னிடம் காட்டப்படுவது தான். **(அது அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4. மேற்படி 3 நபர்களுக்கும் ஏற்பட்ட காயமானது அவர்கள் 09.11.2018 ம் தேதி மாலை 05.30 மணியளவில் சங்கராபுரத்தில் பட்டாசு வெடித்து விளையாடிக்கொண்டிருந்தபோது மேற்படி காயங்கள் ஏற்பட்டதாக கூறினார்கள். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

5. நான் சிகிச்சை அளித்த மூன்று நபர்களுக்கும் அவர்கள் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்துவரப்பட்டபோது அவர்களின் கால் முட்டுப்பகுதிக்கு கீழே தீக்காயங்கள் எதுவும் கிடையாது என்றால் சரிதான். அவர்களின் கால் பகுதியில் வெடி மருந்து துகள்கள் இருந்தது தொடர்பாக என்னுடைய பரிசோதனையின் போது எதுவும் தென்படவில்லை என்றால் சரிதான். அந்த மூன்று நபர்களுக்கும் ஏற்பட்டிருந்த காயங்கள் நிரந்தர ஊனம் கிடையாது என்றால் கண் பார்வை பாதிக்கப்பட்ட நிதீஷ் குமார் என்பவருக்கு ஏற்பட்ட காயம் காலப்போக்கில் சரியாகிவிடுமா என்பது கண் சிகிச்சை மருத்துவருக்கு தான் தெரியும். நிதீஷ் குமாருக்கு ஏற்பட்டிருந்த காயத்திற்கு அவரை கண் மருத்துவரிடம் மேற்கிகிச்சைக்காக நான் பரிந்துரை செய்யவில்லை என்றால் என்னுடைய சிகிச்சை குறிப்பில் நான் அதை எழுதி வைக்கவில்லை. அந்த நபரின் கண்ணில் இருந்த காயம் தொடர்பான தன்மையை கண் மருத்துவர் பரிசோதனை செய்து தான் கூற முடியும் என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Feb 16, 2026 3:29 PM

Judicial Magistrate 2, Sattur